**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**10 ஜூன் 2016 / 05 ரமதான் 1437**

# வணக்க வழிபாடுகளின் மூலம் குடும்பத்தாரிடம் நல்ல மதிப்பீடுகளை ஏற்படுத்துதல்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ جَعَلَ رَمَضَانَ شَهْرًا مُبَارَكًا. وَفَرَضَ فِيْهِ الصِّيَامَ
وَأَعَدَّ فِيْهِ فَضْلاً كَبِيْرًا وَأَجْرًا عَظِيْمًا. وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ. اَللَّهُمَّ
صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ.
أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا الْمُؤْمِنُوْنَ، اتَّقُوا اللهَ ، أُوْصِيْكُمْ وَإِيَّايَ بِتَقْوَى
اللهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்ஹம்துலில்லாஹ். புனிதமிக்க ரமதான் மாதத்தையும், அந்த மாதத்தில் கிடைக்கும் நன்மைகளையும் அடைவதற்கு வாய்ப்பளித்த எல்லா வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகுக! இப்புனிதமிக்க மாதத்தின் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் நாம் நமது குடும்பத்தாருடன் இணைந்து நன்மைகளைச் செய்யுமாறு இங்கு வந்துள்ள அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு முஸ்லிமும் தன்னை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டுமென முயற்சிக்கும் இந்த ரமதான் மாதத்தில், தனது குடும்பத்தாரிடையே இடைவெளி, உறவு முறைகளில் விரிசல் காணப்படுமானால் அவற்றை எவ்வாறு அடைப்பது என்பது பற்றியும், நம்மை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக ஆக்கி வைக்கும் நமது வணக்க வழிபாடுகள், நமது குடும்பத்தின் உறவுகளை எவ்வாறு பலப்படுத்துவது எனவும் யோசிக்க வேண்டும்.

எவர்கள், ஒருபுறம், வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதிலும், ரமதான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றல், தராவீஹ் தொழுகைகளைத் தொழுதல், தொடர்ந்து அல்லாஹ்வின் பாவமன்னிப்பை அவனது சொர்க்கத்தைக் கேட்பதிலும் ஆர்வமாக இருக்கின்றார்களோ, ஆனால் மறுபுறம், தனது குடும்ப உறுப்பினர்களுடன் (அவர்கள் சகோதர, சகோதரிகளாக இருந்தாலும் சரி, பெற்றோர் பிள்ளைகளாக இருந்தாலும் சரி) சண்டை தகறாறுகள் செய்து கொண்டு, அவர்களின் உறவுகளை முறித்துக் கொண்டுள்ளார்களோ, ஒருவர் மற்றவருடன் பேசாமலிருக்கின்றார்களோ அப்படிப்பட்ட நபர்களின் நின்றும் நாம் ஆகக் கூடாது. உறவு முறைகள் முறிந்து விடுவதற்கு நாம் அனுமதியளித்தால், அவற்றை நாம் சரி செய்ய முயற்சிக்காமலிருந்தால் நோன்பாளிகளாக உள்ள நாம் தவறிழைத்தவர்களாக ஆகி விடுவோம். அல்லாஹ்வின் சொர்க்க வாசல்களை நாம் அடையும் போது அதில் நுழைய முடியாமல் தவறி விழுந்து விடுவதற்கு அத்தவறு காரணமாக அமையலாம்.

இது சம்பந்தமாக இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் ஹதீதில் பின்வருமாறு நவின்றுள்ளார்கள்:

உறவுமுறைகளை முறித்துக் கொண்டவர் சொர்க்கம் செல்ல மாட்டார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

ஜமாஅத்தார்களே!

நமது குடும்ப உறுப்பினர்களுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு ரமதான் மாதம் மிகச் சிறந்த வாய்ப்பாகும். காரணம், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், அண்டை வீட்டார்களைச் சந்தித்து அவர்களுடன் இணைந்து நோன்பு திறப்பது சிங்கப்பூரில் முஸ்லிம்களின் வழமையாக இருந்து வருகிறது. அதற்குப் பின்பு தராவீஹ் தொழுகைகளை அவர்கள் இணைந்து தொழுவதும், சிலவேளைகளில், கடைகளுக்கு சென்று பொருள்களை வாங்குவதும் வழமையாக உள்ளது. இச்செயல்பாடுகள் அனைத்தும் குடும்பத்தார்கள் தமது நேரங்களை இணைந்து கழிப்பதற்கும், ஒருவர் மற்றவருடன் நெருக்கமாக அமைவதற்கும் உதவியாக உள்ளன. இன்ஷாஅல்லாஹ், இச்செயல்பாடுகளின் நினைவுகள் நமது குடும்ப உறுப்பினர்களை எப்போதும் நினைவில் கொண்டு, அவர்கள் மீது அன்பு கொள்வதற்குக் காரணமாக அமையும்.

ஜமாஅத்தார்களே!

எவர்கள் மற்றவர்களுடனான உறவை முறித்துக் கொண்டுள்ளார்களோ அவர்கள் தமது உறவுகளைப் புதுப்பித்து, பலப்படுத்திக் கொள்வதற்கும் ரமதான் மாதம் மிகச் சிறந்த வாய்ப்பாகும். ”பரக்கத்” எனும் அருள்களும் அபிவிருத்திகளும் மிக்க இந்த ரமதான் மாதம் நமது உள்ளங்கள் மென்மையடைவதற்கு ஒர் அரிய வாய்ப்பாக உள்ளது.

நோன்பாளியின் துஆக்கள் மறுக்கப்படுவதில்லை; காரணம் நோன்பாளி நோன்பு வைத்துள்ள நிலையில் அல்லாஹ்வின் பக்கம் மிகவும் நெருக்கமாக இருக்கின்றார் என ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள். எனவே தான், முறிந்து விட்ட உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டு, உறவினர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ரமதான் மாதம் ஒரு பொருத்தமான மாதமாகக் கருதப்படுகிறது.

நாம் நமது உறவினர்களுடன் நீண்ட நாட்களாக பேசாமலிருந்தால் ரமதான் மாதத்தின் வாழ்த்துக்களை ஒருவர் மற்றவருக்குத் தெரிவித்து பேச்சுகளை ஆரம்பிக்கலாம். ஒருவர் மற்றவருடன் மன்னிப்பைக் கேட்டுக் கொள்ளலாம். நோன்பு திறப்பதற்காக ஒருவர் மற்றவருக்கு உணவுகளைப் பரிமாறிக் கொள்ளலாம். இப்புனிதமிக்க மாதத்தில் அல்லாஹ் நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் விரும்புவது போல், நமக்கு எதிராக தவறு செய்தவர்களை மன்னிப்பதற்கு நமது உள்ளத்தில் இடமளிக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "ஆலி இம்ரான்" எனும் அத்தியாயத்தின் 133-134 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

۞ وَسَارِعُوٓا۟ إِلَىٰ مَغْفِرَةٍ مِّن رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا
ٱلسَّمَٰوَٰتُ وَٱلْأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِينَ ١٣٣
ٱلَّذِينَ يُنفِقُونَ فِى ٱلسَّرَّآءِ وَٱلضَّرَّآءِ وَٱلْكَٰظِمِينَ ٱلْغَيْظَ

وَٱلۡعَافِينَ عَنِ ٱلنَّاسِۗ وَٱللَّهُ يُحِبُّ ٱلۡمُحۡسِنِينَ ١٣٤

பொருள்: இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும், சுவனபதியின் பக்கமும் விரைந்து செல்லுங்கள்; அதன் (சுவனபதியின்) அகலம் வானங்கள், பூமியைப் போலுள்ளது; அது பயபக்தியுடையோருக்காகவே தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. (பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள்; தவிர கோபத்தை அடக்கி கொள்வார்கள்; மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள்; (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான்.

நபி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

தமக்கு எதிராக மற்றவர்கள் அநீதமிழைத்தும் கூட பழிக்குப் பழி வாங்காமலிருப்பவரே உண்மையாக உறவுமுறைகளைப் பாதுகாத்தவராக ஆவார். குடும்ப உறுப்பினர்களில் மற்ற பிரிவார் உறவு கொள்ள மறுத்தும் கூட அவர்களிடம் உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள முயற்சிப்பது உறவு முறைகளைப் பாதுகாப்பதில் சிறந்த முறையாகும். உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள நாம் முதலில் முயற்சிக்க வேண்டும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

ஜமாஅத்தார்களே!

நமது குடும்பத்தாருடன் உறுதியான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டால் நமக்கிடையே மகிழ்ச்சியான நிலை ஏற்படும். உலகம் மற்றும் உலகச் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான உடன்பாடான மனோநிலையை அது நமக்கு ஏற்படுத்தும். காரணம், கஷ்டங்களிலிருந்து வெளிவருவதற்கு நம்மிடம் உறுதியான உதவி உள்ளது எனும் சிந்தனை நம்மிடம் ஏற்படும். நமது தொழிலிலும் நமது படிப்புகளிலும் நாம் வெற்றி பெறுவதற்கு அச்சிந்தனை நமக்கு உதவியாக இருக்கும். வீட்டில் மகிழ்ச்சியாக உள்ள ஒருவர் தனது தொழில் மற்றும் கல்விக் கூடங்களிலும் மகிழ்ச்சியாக இருப்பார்.

ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

யார், தனக்கு வாழ்வாதாரம், அதிகமாகவும் எளிதாகவும் கிடைக்க வேண்டுமென நினைக்கின்றாரோ, தனது வாழ்நாள் அதிகரிக்க வேண்டுமென விரும்புகிறாரோ அவர் தனது உறவினர்களுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளட்டும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

குடும்ப உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள இம்மாதத்தை அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்! குடும்ப உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது தனிநபர் மற்றும் சமுதாய ரீதியில் மிகப் பெரிய அளவில் பலன் தருவதாகும். நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதாகும். நல்ல மதிப்பீடுகள், நன்னடத்தைகள் மற்றும் சிறந்த கல்வி ஆகியவற்றால் நமது குடும்பத்தை முன்னேற்றமடையச் செய்வோமாக!

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.